# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97/2018

Prosecution Witness 8

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.ரங்கன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 31st day of May 2024.

(Accused present)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது கோவை மாவட்டம், போத்தனூர்செட்டிபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். மகாலிங்கபுரம் காவல் நிலையத்தில் நான் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது பொள்ளாச்சி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 உத்தரவுப்படி 29.08.2016 அன்று கோவை மத்திய சிறையில் தபால் கொடுத்து பின்னர் 30.08.2016 அன்று ஆஜர் எதிரியை கோவை, மத்திய சிறையில் இருந்து கோவை, அரசு மருத்துவமனைக்கு ஆண்மை தன்மை பரிசோதனைக்காக அழைத்துச்சென்றேன்.

2. கோவை அரசு மருத்துவமனையில் அவருக்கு ஆண்மைதன்மை பரிசோதனை எடுக்கப்பட்டது. பின்னர் ஆஜ்ர் எதிரியை கோவை மத்திய சிறையில் ஒப்புவித்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. நீதிமன்றத்தின் தபாலை நான்தான் பெற்றேன். ஆய்வாளர் அவ்வாறு தபாலை நீதிமன்றத்தில் இருந்து பெறுவதற்கு எனக்கு வாய்மொழி உத்தரவு பிறப்பித்திருந்தார். மேற்படி விபரத்தை ஆய்வாளரின் விசாரணையில் நான் கூறியுள்ளேன். ஆய்வாளர் அவ்வாறு எந்த உத்தரவும் வாய்மொழியாக எனக்கு பிறப்பிக்கவில்லை நான் வழக்கிள்காக பொய் சாட்சயமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி தபாலை விசாரணை அதிகாரி என்ற முறையில் ஆய்வாளர்தான்

பெற்றிருக்க வேண்டும் என்றாலும் நான் அதை பெற்றிருப்பது தவறு என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.